Registered as a Newspaper
பக்கங்கள் 06
விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் தினசரி
Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 13 (28-11-93) ஞாயிற்றுக்கிழமை ஓசை 283

மாவீரர் நாளில் 42 குற்றவாளிகள் காவல்துறையினரால் விடுதலை

தமிழீழ காவல்துறையால் பல்வேறு குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 42 நபர்கள் தமிழீழ மாவீரர் நாளையொட்டி நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் செய்த குற்றங்கள் காவல்துறையால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகளாக காணப்பட்டு காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது இவ்வாண்டிற்கான தமிழீழ மாவீரர் நாளையொட்டி தமிழீழ தேசியத் தலைவரின் விசேட பணிப்பின் பேரில் இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

மாவீரர் நாள் உணர்வு பூர்வ அனுஷ்டிப்பு!

பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி!

அணிவகுப்பு மரியாதை, பொதுக்கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாள் தமிழீழமெங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழத் தாயக விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கு நேற்றையதினம் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் பெருமளவு எண்ணிக்கையான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மணியோசையுடனும், மௌன அஞ்சலியுடனும், நினைவுச்சுடர் ஏற்றலுடனும் ஆரம்பமாகிய மாவீரர் நாள் அனுஷ்டானங்கள் நேற்று இரவுவரை தொடர்ச்சியாக நடைபெற்றன. அஞ்சலிக் கூட்டங்கள், அமைதி வணக்கங்கள், அணிவகுப்பு மரியாதைகள், மலரஞ்சலிகள், தீப வணக்கங்கள் என்று நேற்று நாள் முழுவதும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

சிறிலங்கா விமானப்படையினரது குண்டு வீச்சு அச்சுறுத்தல்கள் ஒருபுறம், இடைவிடாது தொடர்ச்சியான கொட்டும்மழை மறுபுறம் இத்தனைக்கும் மத்தியிலும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன

யாழ். குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கோட்டரீதியான அஞ்சலிக்கூட்டங்கள் இடம்பெற்றன. இக்கூட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இவற்றைவிட வன்னிப் பிராந்தியத்தில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சி பொங்கும் வகையிலும் நடைபெற்றதாகவும் ஆங்காங்கிருந்து எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை 5 00மணியளவில தமிழீழத் தேசியக் கொடி சம்பிரதாயபூர்வமாக இறக்கிவைக்கப்பட்டது. கலை நிகழ்வுகள் இடம்பெற்றஇடங்களில் இந்த நிகழ்வுகள் நிறைவடைந்ததும் தேசியக்கொடி இறக்கிவைக்கப்பட்டதுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (க)



நேற்று முன்தினம் நள்ளிரவு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் அஞ்சலி செலுத்துகின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் வெள்ளம் அலை மோதியது

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேச விடுதலைக்காகத் தியாக மரணமடைந்த மாவீரர்களுக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று

மக்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை நோக்கிவருவது அதிகமாகிக் கொண்டிருந்தது.

நள்ளிரவுக்கு ஒரு சில நிமிடங்கள் மட்டும் இருந்தன மக்கள் வெள்ளம் நிரம்பிக்

லும் இல்லத்தின் மத்தியில் காணப்பட்ட பிரதான நினைவுச் சுடரை யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா ஏற்றி வைத்தார். இதைத் தொடர்ந்து மாவீரர்

பூநகரிப் பேரிழப்பை மூடிமறைக்க

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மணியோசையுடனும், மெளன அஞ்சலியுடனும், நினைவுச்சுடர் ஏற்றலுடனும் ஆரம்பமாகிய மாவீரர் நாள் அனுஷ்டானங்கள் நேற்று இரவுவரை தொடர்ச்சியாக நடைபெற்றன. அஞ்சலிக் கூட்டங்கள், அமைதி வணக்கங்கள், அணிவகுப்பு மரியாதைகள், மலரஞ்சலிகள், தீப வணக்கங்கள் என்று நேற்று நாள் முழுவதும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன·

சிறிலங்கா விமானப்படையினரது குண்டு வீச்சு அச்சுறுத்தல்கள் ஒருபுறம், இடைவிடாது தொடர்ச்சியான கொட்டும்மழை மறுபுறம் இத்தனைக்கும் மத்தியிலும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன

யாழ். குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கோட்டரீதியான அஞ்சலிக்கூட்டங்கள் இடம்பெற்றன. இக்கூட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இவற்றைவிட வன்னிப் பிராந்தியத்தில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சி பொங்கும் வகையிலும் நடைபெற்றதாகவும் ஆங்காங்கிருந்து எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை 5.00மணியளவில தமிழீழத் தேசியக் கொடி சம்பிரதாயபூர்வமாக இறக்கிவைக்கப்பட்டது. கலை நிகழ்வுகள் இடம்பெற்றஇடங்களில் இந்த நிகழ்வுகள் நிறைவடைந்ததும் தேசியக்கொடி இறக்கிவைக்கப்பட்டதுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (க)

நேற்று முன்தினம் நள்ளிரவு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் அஞ்சலி செலுத்துகின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் வெள்ளம் அலை மோதியது

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேச விடுதலைக்காகத் தியாக மரணமடைந்த மாவீரர்களுக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று முன்தினம் இரவு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் வெள்ளம் காத்திருந்தது.

நேற்றுமுன்தினம்நள்ளிரவை நோக்கி நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. நேரம் நெருங்கநெருங்க வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை நோக்கிவருவது அதிகமாகிக் கொண்டிருந்தது.

நள்ளிரவுக்கு ஒரு சில நிமிடங்கள் மட்டும் இருந்தன மக்கள் வெள்ளம் நிரம்பிக் கொண்டிருந்தது. 12மணி ஒரு செக்கன் ஆகியதும் ஆங்காங்கு கோயில்களில் இருந்து மணியோசை ஒலித்தது. கூடியிருந்த மக்கள் அனைவரும் நின்றஇடங்களிலேயேஅமைதி வணக்கம் செலுத்தினர். இவ் அமைதி வணக்கம் இரண்டு நிமிடம் நீடித்தது.

தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லத்தின் மத்தியில் காணப்பட்ட பிரதான நினைவுச் சுடரை யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா ஏற்றி வைத்தார். இதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மாவீரர்களது சமாதிகளுக்கு முன்பாக இருந்த நினைவுச்சுடர்களை ஏற்றி வைத்தனர் பின்னர் மாவீரர் துயிலும் இல்லம் முழுவதும் ஒளி வெள்ளம் பரவியது. இதைத் தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன! (ச)

யாழ் குடாநாட்டில் 3 இடங்களில் மாவீரர் தின எழுச்சி கூட்டம்

மாவீரர்நாள் பொதுக் கூட்டங்கள் யாழ். மாவட்டத்தில் கோட்டரீதியாக மூன்று இடங்களில் நடைபெற்றன. வலிகாமம் கோட்டத்தில் அரியாலையிலும், தென்மராட்சி கோட்டத்தில் மட்டுவிலிலும், வடமராட்சியில் அல்வாயிலும் இக் கூட்டங்களும் அணிவகுப்புகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வலிகாமம் கோட்டத்தில் மாவீரர்நாள் கூட்டம்நேற்று மாலை 4.10 மணியளவில் அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் ஆரம்பமாகியது இந் நிகழ்வில் யாழ். மாவட்ட விசேட தளபதி செல்வராசா தேசியக் கொடியை ஏற்றிவைத்

(6ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழத்திற்கான திறவுகோல் பூநகரியில் ஆரம்பிக்கப்பட்டது

- கடற்புலிகளின் விசேட தளபதி சூசை

(வடமராட்சி)

பூநகரி - நாகதேவன் கடற்படைத்துறை தாக்குதல் எமது தலைவரினால் திட்டமிட்டு நடாத்தப்பட்டது, எமது மக்கள் கடல்பயணங்களின் போது கடற்படையினரால் கோரமாக கொல்லப்படுவதையிட்டு தலைவரின் உள்ளம் குமுறியது அவரது வழிகாட்டலினால் தமிழீழத்திற்கான திறவு கோல் பூநகரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திறவுகோல் மேலும்

(6.ஆம் பக்கம் பார்க்க)

படைபலத்தை பெருக்குவதன் மூலம் தமிழீழத்திற்கு அடித்தளமிடுவோம்

மாவீரர் தினத்தில் கரிகாலன் அழைப்பு

''எதிரி தயார் நிலையில் இருந்த இராணுவ முகாம் கூட தகர்த்தெறியப்பட்டது, விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் போராளிகளுக்கு உள்ள மன உறுதியையும் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது. சிறிலங்காஇராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்து மக்களை அழிக்கத் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்ற இக்காலத்தில் இராணுவ முகாம்கள் தகர்க்கப்படுவதும் இராணுவத்தினர் பெருமளவு கொல்லப்படுவதும் அவர்களின் ஆயுதங்கள்

6(ஆம் பக்கம் பார்க்க)

பூநகரிப் பேரிழப்பை மூடிமறைக்க யாழ்ப்பாணம்மீது படையெடுப்பு!

அரசாங்கம் திட்டமிடுவதாக தகவல்

(கொழும்பு)

பூநகரியில் சிறிலங்கா இராணுவம் சந்தித்த தோல்வியை அடுத்து. யாழ்ப்பாணத்தை இலக்காகக் கொண்டு பெரிய தாக்குதல் ஒன்றிற்கு திட்டமிடப்பட்டுவருவதுதெளிவாக தெரிகிறது என 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் 'சந்தேசிய' வானொலிக்கு தெரிவித்துள்ளார்,

பூநகரி தோல்வியை மூடி மறைக்கும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டுவரும் இவ் இராணுவ நடவடிக்கையினால் இராணுவத் தரப்பு பெரும் அழிவைச் சந்திக்கும் என்பது தெளிவு என்றும்,

யாழ்ப்பாணத்தை நோக்கி செல்ல முயலும்போது பாரிய உயிரிழப்புகள் ஏற்படும் என்பது தவிர்க்கமுடியாதது இவ்வாறான நிலையில் பொது மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். அப்போது யாழ். மக்கள் பெருமளவில் அகதிகள் ஆக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சராக ரணில் உத்தியோக பூர்வமற்ற பதவி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரங்கள் உத்தியோக பூர்வமற்ற முறையில் சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக இவ் அமைச்சை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வைத்திருக்கும் போதும் நாளாந்தம் நடைபெறும் பாதுகாப்புத்தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதும், பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதும் ரணிலின் பொறுப்பாகவே இருக்கும்.

இதுவரைகாலமும் முப்படைகளுக்கும் தளபதியான டி.பி விஜேதுங்க படைகளுக்கு ஆலோசனை வழங்குவது இல்லை எனவும், ரணில் விக்கிரமசிங்கவே அதனைச் செய்துவந்தார் எனவும் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால்ரணில்விக்கிரமசிங்கவிடமே இந்தப் பொறுப்பை உத்தியோகபூர்வமற்ற முறையில் ஒப்படைத்துவிட ஆலோசனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி தோல்விக்குப் பின்

(6ஆம் பக்கம் பார்க்க)

அளவெட்டி முகாமருகே பொதுமகன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப்பகுதிக்குசீவல் தொழிலுக்காக சென்ற பொதுமகன் ஒருவர் இராணுவத்தினரிடம் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. கடந்த வியாழனன்று மல்லாகம் தும்புத் தொழிற்சாலை அகதிகள் முகாமில் வசிக்கும் சுப்டையா செல்லத்துரை (39) என்பவர் சீவல் தொழிலுக்காக அளவெட்டிப் பகுதிக்கு சென்றிருந்தார்.

இவர் அப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது சைக்கிள் மட்டுமே பின்னர் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீனவரைநோக்கி தாக்குதல்

மாதகல், காரைநகர் கடற்பரப்புக்களில் ரோந்து சுற்றி வந்த சிறிலங்கா கடற்படையினரின் விசைப்படகு ஒன்றிலிருந்து கடந்த வியாழனன்று மாலை 6.00 மணியளவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிலாவத்துறை, கொண்டச்சி முகாம் இராணுவம் வெளியேறியது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை, கொண்டச்சி ஆகிய பகுதிகளில் இருந்த சிறிலங்கா இராணுவ முகாம்கள் நேற்று முன்தினம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் அம் முகாமில் இருந்தஇராணுவத்தினர் வெளியேறிச் சென்றனர்.

மணலாற்றில் 'இதயபூமி1' நடைபெற்ற சில தினங்களில் மன்னாரில் அமைக்கப்பட்டிருந்த பெரிய இராணுவ வேலி இராணுவத்தினரால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது பூநகரி 'தவளை' நடவடிக்கையின் பின்னர் கடற்கரையில்அமைந்திருந்த சிலாவத்துறை முகாமும், கொண்டச்சி முகாமும் அகற்றப்பட்டுள்ளன.

விஞ்ஞானப்பொருள் விநியோகம்

பாடசாலைகளுக்குவிஞ்ஞானப் பொருள்கள விநியோகம் யா!யாழ் இந்துக்கல்லூரியில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாகஅறிவித்தல் தந்தும் இது வரைக்கும் பொருள்களைப் பெற்றுக் கொளளாத பாடசாலைகள் 30-11-1993 செவ்வாய்க் கிழமை அன்று பெற்றுக் கொள்ளவும்.

இதுவே இறுதி அறிவித்தல் ஆகும் என யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

வருட இறுதிவரை அவகாசம்

எழுதுவினைஞர்கள்மற்றும் அதோடு தொடர்புடைய வேலைகளுக்கு மாகாண சபையினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள்வேலைத் தளங்களுக்கு செல்லமுடியாதிருப்பின் அவர்களுக்கு 31-12-93ஆம் திகதி வரையும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என மாகாணசபை பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளார்,

பனம் விதை நடுகை

யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனைவள அபிவிருத்திப் பகுதியினரால் தியாகி திலீபன் நினைவாக கடந்த 15-09-93-ம் திகதி தொடக்கம் 26-09-93-ம் திகதி வரையான காலப்பகுதியில் கிராமிய உற்பத்திக்குழுக்கள் மூலமாக பொதுமக்களையும் ஒன்றிணைத்து பனம் விதை நடுகை மேற்கொள்ளப்பட்டது

இந்த நடவடிக்கையின் போது சுமார் 67,230 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டதோடு தொடர்ந்து பராமரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

விளக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் உள்ள இந்துக் கோவில்களில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை கார்த்திகை விளக்கீடு இந்துக்கள் இல்லங்களிலும், குமாராலயங்களிலும் (முருகன்) இடம்பெறும்

(24)

வாக்குவாதம் கைகலப்பாகியது

(மானிப்பாய்)

வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவரின் குடை மற்றவரின் குடையில் பட்டு சேதத்தை (கிழிசலை) உண்டாக்கியதால் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கை

விதை உருளைக்கிழங்கு விநியோகிக்க ஏற்பாடு

ஏற்கனவே விதை உருளைக் கிழங்கிற்கு பணம்செலுத்தியவர்களுக்கு தலா உச்சமாக மூன்று பெட்டி என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

அண்மையில் உருளைக் கிழங்கு விநியோகம் சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இது தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கென சுமார் 140 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு''றுகுணு'' கப்பலில் ஏற்றப்பட்டுள்ளது. இக்கப்பல் இவ்வார இறுதியில் பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி கலந்துரையாடலில் மேலும் சில தீர்மானங்கள்,

மேற்படி விதை உருளைக் கிழங்கு விநியோகம் விவசாய அடையாள அட்டை உடையவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வுள்ளது. விவசாய அடையாள அட்டை இல்லாதவர்களுக்குவிவசாயஅட்டை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உருளைக்கிழங்குவிவசாயம் செய்வதற்கு திட்டமிட்டிருந்தும் உரிய காலத்தில் தமது பெயர்களை பதிவு செய்து முற்பணம் செலுத்தாத விவசாயிகளின் கோரிக்கை கவனத்தில்எடுத்துக்கொள்ளப்படும்

இவ்விதை உருளைக்கிழங்கு உரும்பராய், புத்தூர், உடுவில், கீரிமலை, தொல்புரம், புலோலி, நல்லூர் ஆகிய கமநல சேவைகள் திணைக்களங்களிற்கு விநியோகிக்கப்படும். சம்பந்தப்பட்ட விவசாயிகள் தமது காணி கொடர்பான ஆவணங்கள விவசாய அடையாள அட்டை என்பனவற்றை சமர்ப்பித்து ஒதுக்கிய உருளைக்கிழங்கை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலதிகமாக முற்பணம் செலுத்தியதொகைக்கு விவசாய உள்ளீடுகளான உரம். கிருமிநாசினி, மண்ணெண்ணெய் என்பன விநியோகிக்கப்படும்.

ஒரு பெட்டி விதை உருளைக்கிழங்கிற்கு 15 லீறறர் என்ற அடிப்படையில் லீற்றர் ஒன்று ரூபா 15இற்கு கமநல சேவைகள் நிலையத்தினால் விநியோகிக்கப்படும் மேலும் விவசாயிகள் முன்கூட்டியே பெறுவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது

முடிவுதிகதி நீடிப்பு

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள எழுது வினைஞர் சுருக்கெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு திகதி 20. 12. 93 வரை நீடிக்கப்பட்டுள்ளதென யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

புனரமைப்பு

மாவீரர் வாரத்தினை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனபணியாளர்களும் போராளிகளும் மக்களுடன் இணைந்து மாவீரர் வார ஆரம்பநாளன்று கோப்பாய் குடியேற்றத் திட்ட பிரதான வீதியை சிரமதான அடிப்படையில் புனரமைப்பு செய்தனர்

மேற்படி நிகழ்வின் மூலம் சுமார் 1¼லட்சம் பெறுமதியான 200 மீற்றர் நீளமான குடியேற்றத் திட்ட வீதி புனரமைப்புச் செய்து முடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

2-வது ஆண்டு நிறைவு

வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் இந்நாளில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலை மாணவர்களுக்கும், பெரியோர்களுக்குமான அறிவு நூல்கள், பாடசாலைக்கு உரிய புத்தகங்கள், கொப்பிகள் நியாய விலையில் வாங்கவும், விற்கவும் நாட வேண்டிய இடம்

யாழ் பழைய புத்தகக்கடை

இரணைமடுக் குளம் உடைப்பெடுக்கும் நிலை

(கிளிநொச்சி)

கடும்மழை காரணமாக கிளிநொச்சி இரணைமடுக் குளம்உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

வன்னிப் பகுதியெங்கும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் பல குளங்கள் உடைப்பெடுத்து ஆறுகள், வீதிகள், வயல் வெளிகள், காடுகளில் வெள்ளம் பாய்ந்தவண்ணம் உள்ளது.

தற்போது இரணைமடுக் குளம் நிரம்பி உடைப்பெடுக்கும் நிலையில் இருப்பதாகவும் இதனைத் தடுக்கும் நோக்கில் அக்குளத்துநீரை பெருமளவில் திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுளள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

34அடி கொள்ளளவு உள்ள இக் குளத்தில் 26 அடி வரையான தண்ணீரை மட்டும் வைத்துக்கொண்டு மீதியை திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்குளம் 1991ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட போதும் பூரணமாக இதன் வேலை முடிக்கப்படவில்லை.

இக்குளம் திறந்து விடப்பட இருப்பதால் தண்ணீர் பெருக்கெடுத்துப்பாயும் பகுதிகளில் உள்ளோரை இடம் பெயருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக் குளத்தின்கீழ் பல ஆயிரக் கணக்கான ஏக்கர்நிலம் பயிர் செய்யப்படுவது தெரிந்ததே.

கிளிநொச்சியில் கல்மடு. கனகாம்பிகை, புதுமுறிப்பு, வன்னேரி, கோணாவில், அக்கராயன்குளம் ஆகிய நீர்ப்பாய்ச்சல் குளங்களும், முல்லைத்தீவில் விசுவமடு, உடையார்கட்டு, கசைக்கேணி, தென்மியன்குளம் மருதன் குளம், தோமங்கன் ஆகிய குளங்கள் வான்பாய்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

மொத்தத்தில் வன்னிப் பகுதியெங்கும் தொடர் அடை மழையினால் வெள்ளக் காடாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்;
26 — 12 — 1959

தாயக விடிவில்:
28 — 11 — 1986

வீரவேங்கை கரன்
(தர்மலிங்கம் பிரபாகரன்)

பிரபா கரனே திறல்சேர் மறவா
மறமே மரபாய் மாற்றிய மணியே
வாட்டுதே தினமும் உந்தன் நினைவு
கேட்டிடு எங்கள் நெஞ்சின் நெகிழ்வினை
கண்ணியம் அற்ற காட்டுச் சிங்களம்
பண்ணிடும் பாதகப் படுகொலை கண்டு
வெஞ்சினம் கொண்டு வெகுண்டுமே எழுந்தாய்
சங்காரப் போருக்கு சங்கெடுத் தூதினாய்
எத்தரை எதிரியை ஏவல் பேய்களை
பத்திர மாகவே எமனிடம் சேர்த்தாய்
சத்தியப் போரில் சளைக்காது ஆடி

மட்டு. மாவட்டத்தில் படையினர் பாலியல் வன்முறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பெண்கள்மீது சிறிலங்காப் படைகள் பாலியல் வன்முறையைப் பிரயோகிக்கும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடந்துள்ளன

அண்மையில் பிரம்படித் தீவைச் சேர்ந்த ஆறு தமிழ்ப் பெண்கள் சிறிலங்கா கொமாண்டோப் படையினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

புலிபாய்ந்த பாலம் பெரிய மடு ஓரம் பகுதிக்கு விறகு வெட்ட பெண்கள் சென்ற வேளையில் அங்கு பதுங்கியிருந்த கொமாண்டோப் படையினர் அவர்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

இவ்வாறான சம்பவங்களினால் அங்குள்ள தமிழ்ப் பெண்கள் மத்தியில் பீதி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணீர் அஞ்சலி

25. 11. 93இல் முல்லைத்தீவில் மரணமடைந்த
ப. திருநாவுக்கரசு அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி

தமது தந்தையை இழந்து நிற்கும்
திரு. தி. சபாரத்தினம் (கூ. அ. உ. ஆணையாளர்
ப தெ. வளம்) அவர்களுக்கும், அவரது
குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அங்கத்தவர்,
பணிப்பாளர், பணியாளர்.

அச்சுவேலி - கரவெட்டி - பருத்தித்துறை
பனை, தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்கள்
வடமராட்சி கொத்தணியும்

திக்கம்,
அல்வாய்.

(5863)

கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் (பனை தென்னைவள அபிவிருத்திப்பிரிவு, வட பிராந்தியம்) அவர்களது அன்புத் தந்தையார்,

உயர்திரு. ப. திருநாவுக்கரசு

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது நிறுவனங்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

சா. செல்வரத்தினம்,
தலைவர்,
வடமாகாண தெ ப. பொ. கூ. ச. சமாசம்.

(சி-8015)

நினைவு கூருகின்றோம்..

பட்டதோடு தொடர்ந்து பராமரிக்கும் பணிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன

விளக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டிலுள்ள இந்துக் கோவில்களில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை கார்த்திகை விளக்கீடு இந்துக்கள் இல்லங்களிலும், குமாராலயங்களிலும் (முருகன்) இடம்பெறும் (24)

வாக்குவாதம் கைகலப்பாகியது

(மானிப்பாய்)

வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவரின் குடை மற்றவரின் குடையில் பட்டு சேதத்தை (கிழிசலை) உண்டாக்கியதால் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிந்துள்ளது. அண்மையில் யாழ். வட்டுக்கோட்டை பிரதான வீதியில் உள்ள நவாலி தேவாலயப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவ தினத்தன்று இருவரும்வீதி வழியேஎதிர் எதிரே வந்துகொண்டிருந்த போது தமக்குள் முன்னரே வைத்திருந்த பகைகாரணமாக விலத்திச் செல்லாததினாலேயே இக் கைகலப்பு ஏற்பட்டுள்ளது இதனால் இருவரும் நன்றாக தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். (07)

கருத்தரங்கு

(குருநகர்)

சுன்னாகம் லயனஸ் கழகம் உடுவில் வைத்திய அதிகாரி பிரிவின் அனுசரணையுடன் மக்கள் மத்தியில் சலரோக நோய் தடுப்புக் கருத்தரங்கு ஒன்றை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் சர்வோதய காரியாலய கேட்போர் கூடத்தில் நடத்த உள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெறும். மேற்படி கருத்தரங்குடன் இலவச பரிசோதனைகளும் நோயாளருக்கு வழங்கப்பட இருக்கிறது (22)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல்பதினொரு மணியளவில் யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் மண்டபத்தில்நடைபெறவுள்ளது இதில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் முக்கியபிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட இருப்பதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

டர்பான ஆவணங்கள விவசாய அடையாள அட்டை என்பனவற்றை சமர்ப்பித்து

ரமைப்புச் செய்து முடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

2-வது ஆண்டு நிறைவு

வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் இந்நாளில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலை மாணவர்களுக்கும், பெரியோர்களுக்குமான அறிவு நூல்கள், பாடசாலைக்கு உரிய புத்தகங்கள், கொப்பிகள் நியாய விலையில் வாங்கவும், விற்கவும் நாட வேண்டிய இடம்

யாழ் பழைய புத்தகக்கடை

யாழ் பழைய புத்தகக்கடை,
அர்ச்சுனா வீதி (ஸ்ரான்லி)
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(6712)

JAFFNA COLLEGE
CEYLON

யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரி விரிவுரைகள்

கல்வியாண்டு 1994 - 1995

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்
05-01-1994 இல் ஆரம்பமாகின்றன.

விஞ்ஞானமாணி முதற் தேர்வு
G. S Q. (B Sc.)

பாடங்கள் ; தூயகணிதம்
பிரயோக கணிதம்
புள்ளி விபரவியல்
பொருளியல்

(ஏதாவது 3 பாடங்கள் தெரிவு செய்யலாம்)

- க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி. அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
- 1993 ஆகஸ்ட் மாதப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 20-12-1993

விபரங்கட்கு;

யாழ்ப்பாணக் கல்லூரி,
(வர்த்தக வங்கிக்கு அருகாமையில்)
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8013)

வீரவேங்கை கரன்

(தர்மலிங்கம் பிரபாகரன்)

பிரபா கரனே திறல்சேர் மறவா
மறமே மரபாய் மாற்றிய மணியே
வாட்டுதே தினமும் உந்தன் நினைவு
கேட்டிடு எங்கள் நெஞ்சின் நெகிழ்வினை
கண்ணியம் அற்ற காட்டுச் சிங்களம்
பண்ணிடும் பாதகப் படுகொலை கண்டு
வெஞ்சினம் கொண்டு வெகுண்டுமே எழுந்தாய்
சங்காரப் போருக்கு சங்கெடுத் தூதினாய்
எத்தரை எதிரியை ஏவல் பேய்களை
பத்திர மாகவே எமனிடம் சேர்த்தாய்
சத்தியப் போரில் சளைக்காது ஆடி
முத்தமிழ் வாழ உன்னுயிர் ஈந்தாய்
வருமொரு நாளில் ஈழம் மலரும்
திருமக ளென்ன நாடு பொழியும்
செருவில் மறைந்த நீயும் வீரரும்
கருவில் வைத்த இலட்சியம் வெல்லும்.

பிரபாகரன் வீதி,
கோப்பாய் தெற்கு.

குடும்பத்தினர்
உறவினர்.

(6704)

---

6 ஆம் ஆண்டு அணையா நினைவு

தோற்றம்:
17 - 10 - 1968

மறைவு:
28 - 11 - 1987

வீரவேங்கை வின்சன்

(கெங்காதரம் மகிழ்நன்)

விடிவெள்ளி பூக்கின்ற வேளை நம்
வானகத்தே யுயர்ந்து
குடிகொண்டு விட்ட நம் மாவீரர்
குழாத்து ளொன்றி
அடியுண்ட தமிழர்கள் அரங்கேற
வென்றுயி ரீந்தளித்த
விடிவெள்ளி யாமுயர் வின்சனே
உன் நினைவோங்குதுமே

சரசாலை,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

(6711)

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. நி. சபாரத்தினம் (பனை தென்னைவள அபிவிருத்திப்பிரிவு, வட பிராந்தியம்) அவர்களது அன்புத் தந்தையார்,

உயர்திரு. ப. திருநாவுக்கரசு

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது நிறுவனங்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

சா. செல்வரத்தினம்,
தலைவர்,
வடமாகாண தெ ப. பொ. கூ. ச. சமாசம்.

(சி-8015)

நினைவு கூருகின்றோம்..

28. 11. 1993

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை திரியாய்ப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்த போது வீரச்சாவெய்திய,

கப்டன் கருணா (முத்துக்குமாரு யுகராஜா - சாம்பல்தீவு - திருமலை)

ஜனகராஜ் (சபாரத்தினம் செல்வசோதி, அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

கரன் (தர்மலிங்கம் பிரபாகரன்-கோப்பாய் தெற்கு யாழ்.)

1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

வின்சன் (கெங்காதரன் மகிந்தன் -சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

1988 ஆம் ஆண்டு மட்டு-களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

தென்தமிழீழத்தில் முதல் வீரச்சாவெய்திய பெண் போராளி,

லெப். அனிதா (சித்திராதேவி தம்பிராசா - ஆரையம்பதி - மட்டு.)

யாழ் நாவற்குழிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

திருமதி மனோகரி பிரபாகரன் (அருள்வீதி, நாவற்குழி - யாழ்.)

1990 ஆம் ஆண்டு ஊர்காவற்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

வதனன் (கார்த்திகேசு பாலேந்திரன் - கருங்காலி-காரைநகர்)

சிறி (முத்தையா மகேந்திரராசா - புளியங்கூடல் சுருவில் - ஊர்காவற்துறை)

1991 ஆம் ஆண்டு மட்டு-சத்துருக் கொண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவம் சுட்டதில் பலியான நாட்டுப்பற்றாளரான,

ரவி (இ. உதயகுமார் - இருதயபுரம் - மட்டு)

யாழ் - அரியாலை, நாவலடி இடம்பெயர்ந்தோர் முகாமருகே சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட காரைநகரைச் சேர்ந்த இளைஞன்

**ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்.**

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8009)

உனது பிறந்த நாளில் உன்னை நினைவு கூருகின்றோம்...

28 - 11 - 1993

அன்னை மடியில்:

28
–
11
–
1963



அன்னைத் தமிழுக்காய்:

11
-
11
-
1993

தென்மராட்சி சிறப்புப் பொறுப்பாளர்

லெப். கேணல் குணா

(சுந்தரம் விஜயராசா) கல்வயல்

தென்மராட்சி என்னும் சிறப்பு திருநகரை
கண்ணெனக் காத்து நின்ற கடமையில் சிறந்த வீரா!
குணநலம் அனைத்தும் கொண்ட "குணா" எனும் கொள்கைக்குன்றே
ஈழத்தாய் புலர்ந்து இன்புற்று மகிழும் வேளை
குணா அண்ணா நீயும் இங்கு குழந்தையாய் பிறந்து வாழ்வாய்.

கடந்த 11.11 1993 அன்று பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் (ஒபறேசன் தவளை)
தங்களை ஆகுதி ஆக்கிய மாவீரர்களுக்கும்

எமது நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்

கைத்தொழில் வர்த்தக சங்கம்

(5074)

சாவகச்சேரி

உ
சிவமயம்



கரணவாய் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

திருவிளக்கு வழிபாடு

முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் "அருள் ஒளி" வெளியீட்டிற்குமான சிறப்பிதழ் மலர் 28.11.1993 [ஞாயிற்றுக்கிழமை]

அருள்மிகு
புவனேஸ்வரி அம்பாள்
அனுக்கிரகம்
சகல மக்களுக்கும்
கிடைக்க அருள் வேண்டி
நிற்கும்
அன்பு நெஞ்சங்கள்

ஜமுனா டிரேடஸ்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

பூரண ஒளி விளக்கு

அன்னை பராசக்தி அருள் பாலிக்குந் தலங்களுள் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயமும் ஒன்று இது வடமராட்சிப் பகுதியில் கரணவாய் கிழக்குக் கிராமத்திற்கும், கரவெட்டி மேற்குக் கிராமத்திற்கும் நடுவண் அமைந்துள்ளது. மருதமும் முல்லையும் ஒன்றியிருக்கும் சக்தி மிகு பூமியில் அன்னை புவனேஸ்வரி கண்ணகியாம் கற்புத் தெய்வத்துடன் ஒன்றியிருந்து ஞான வழிபாட்டையும் பக்தி வழிபாட்டையும்ஏற்று அருள்புரிகின்றாள்.

பழம்பெருமை வாய்ந்த இத்தலம் அற்புதங்கள்நிறைந்தது. பக்தி வழிபாட்டுடன்

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்தியங்கள் சிறப்புற நடைபெறுகின்றன கலை கலாசார வளர்ச்சிக்கு ஊரிய தாபனமாகவும் விளங்குகின்றது. கோயில் வளர்ச்சி ஊர் வளர்ச்சி; ஊர்வளர்ச்சி

பூரணையில் திருவிளக்கு வழிபாடும் ஆரம்பிக்கப்பட்டது. மங்கையர்முன்னெடுத்த திருவிளக்குகள் உள்ளத்திலும் இல்லத்திலும் சுடர்தந்தன. அந்த நற்பணியின் ஓராண்டு பூர்த்தியடையும்

பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ
கை. நமசிவாயக் குருக்கள்
முதன்மையாசிரியர்
வடமராட்சிக் கோட்டம்

கோயில் வளர்ச்சி!

ஆலயவரலாற்றில் 1991-ம்

இவ் ஆண்டுக் கார்த்திகைப் பூரணையில் அவள் பணி

அருள்மிகு
புவனேஸ்வரி அம்பாள்
அனுக்கிரகம்
சகல மக்களுக்கும்
கிடைக்க அருள் வேண்டி
நிற்கும்
அன்பு நெஞ்சங்கள்

ஸ்ரீமுருகன் வர்த்தக நிலையம்
152, பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

அருள்மிகு
புவனேஸ்வரி அம்பாள்
அனுக்கிரகம்
சகல மக்களுக்கும்
கிடைக்க அருள் வேண்டி
நிற்கும்
அன்பு நெஞ்சங்கள்

ஜமுனா டிரேடஸ்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

அம்பிகா வர்த்தக நிலையம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

சுபாஸ் பேக்கரி
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

தமிழ் பூங்கா அச்சகம்
நெல்லியடி,
கரவெட்டி.

சுதர்சனம் விற்பனை நிலையம்
ஐடியல் பேக் கவுஸ்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

ஜெகா மோட்டேஸ்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

பூரண ஒளி விளக்கு

அன்னை பராசக்தி அருள் பாலிக்குந் தலங்களுள் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயமும் ஒன்று இது வடமராட்சிப் பகுதியில் கரணவாய் கிழக்குக் கிராமத்திற்கும், கரவெட்டி மேற்குக் கிராமத்திற்கும் நடுவண் அமைந்துள்ளது. மருதமும் முல்லையும் ஒன்றியிருக்கும் சக்தி மிகு பூமியில் அன்னை புவனேஸ்வரி கண்ணகியாம் கற்புத் தெய்வத்துடன் ஒன்றியிருந்து ஞான வழிபாட்டையும் பக்தி வழிபாட்டையும்ஏற்று அருள்புரிகின்றாள்.

பழம்பெருமை வாய்ந்த இத்தலம் அற்புதங்கள்நிறைந்தது. பக்தி வழிபாட்டுடன் ஆரம்பித்த ஆலயம் குடிலில் இருந்து பெருங் கோயிலாக வளர்ச்சி அடைந்துள்ளது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமைகள் நிறைந்த இவ்வாலயத்தில் நித்திய, நைமித்தியங்கள் சிறப்புற நடைபெறுகின்றன கலை கலாசார வளர்ச்சிக்கு உரிய தாபனமாகவும் விளங்குகின்றது. கோயில் வளர்ச்சி ஊர் வளர்ச்சி; ஊர்வளர்ச்சி

கோயில் வளர்ச்சி!

ஆலயவரலாற்றில் 1991-ம் ஆண்டு முக்கியத்துவம்வாய்ந்தது. புதிய சித்திரத்தேரில் அம்பாள் பவனி வந்ததோடு, அடியார் மனங்களின் இருளும் நீங்கியது. கார்த்திகைப் பூரணையில் திருவிளக்கு வழிபாடும் ஆரம்பிக்கப்பட்டது. மங்கையர்முன்னெடுத்த திருவிளக்குகள் உள்ளத்திலும் இல்லத்திலும் சுடர்தந்தன. அந்த நற்பணி பின் ஓராண்டு பூர்த்தியடையும் இவ் ஆண்டுக் கார்த்திகைப் பூரணையில் அவள் பணி தொடரவும் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கவும் அன்னை புவனேஸ்வரியின் மலரடிகளை வாழ்த்துவோமாக.

பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ
கை. நமசிவாயக் குருக்கள்
முதன்மையாசிரியர்
வடமராட்சிக் கோட்டம்

- உச்சில் புவனேஸ்வரி அம்பாள் வழிபடுவோர் சபை

திரு வீடியோ விஷன்
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரவெட்டி.

சிவரூபி வர்த்தகநிலையம்
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

சந்திரமலர் பாதணி விற்பனை நிலையம் (பன்சி)
பிரதான வீதி,
நெல்லியடி கரவெட்டி.

குட்லக் எம்போரியம்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

டாக்டர் க. கதிர்காமத்தம்பி
ஆங்கில வைத்தியசாலை
விக்கினேஸ்வராவீதி, கரவெட்டி.

லக்ஷ்மி சலூன்
நெல்லியடி,
கரவெட்டி.

கிருபா போட்டோ
ஆவரங்கால்,
புத்தூர்.

மகாலட்சுமி தங்கமாளிகை
நெல்லியடி,
கரவெட்டி.

ஆனைமுகன்
புடைவை மாளிகை
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

குகன் ஸ்ரோர்ஸ்
விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி.

நியூ சீமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

யாழினி கிறீம் ஹவுஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி, கரவெட்டி.

அருள்மிகு
புவனேஸ்வரி அம்பாள்
அனுக்கிரகம்
சகல மக்களுக்கும்
கிடைக்க அருள் வேண்டி
நிற்கும்
அன்பு நெஞ்சங்கள்

ஸ்ரீமுருகன் வர்த்தக நிலையம்
152, பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை
பிரதானவீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

இந்திரா கபே
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

ஹப்பி ரெக்ஸ்ரைல்
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

நவீன களஞ்சியம்(மொடோன் ஸ்ரோர்ஸ்)
பஸ் நிலையம்,
நெல்லியடி,
கரவெட்டி.

ராஜா ஸ்ரோர்ஸ்
கலட்டி,
கரவெட்டி.

தயாளன் ஸ்ரோர்ஸ்
மணற்பாதி,
கரவெட்டி.

டாக்டர் க. இராதாகிருஷ்ணன்
மெடிக்கல் சென்ரர்
நெல்லியடி,
கரவெட்டி.

(5862)

சிந்தனைக்கு

உள்ளங்கை நெல்லிக்கனி போல்
உண்மைகள் தெளிவானவை — தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

தனியரசே ஒரேவழி!

தலைவர் பிரபாகரன் விடுத்த மாவீரர் தினச் செய்தியானது இன்றைய அரசியல் யதார்த்தத்தைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதாகவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டைத் தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் தெளிவாகப் பிரகடனப்படுத்துவதாகவும் உள்ளது. இவ்விரு அம்சத்தையும் ''சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. அப்பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை'' என்ற அவரது அறிவிப்பு விளக்கப் போதுமானவையாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத் தனியரசு அமைத்தல் என்ற நிலைப்பாட்டில் இருந்து எப்பொழுதும் மாறவில்லை. இருப்பினும் இனப்பிரச்சினையை சமரச முறையில் தீர்த்துக் கொள்ளும் எந்த முயற்சிக்கும் அவர்கள் முட்டுக்கட்டை போடவுமில்லை. ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ அன்றி இனப்பிரச்சினையில் தலையிட்ட இந்திய அரசாங்கமோ சமரசத் தீர்விற்கு இதய சுத்தியுடன் ஈடுபடவில்லை.

மாறாக, கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல், தமிழ்மக்களையும் தலைவர்களையும் ஏமாற்றி வந்ததுபோல் தொடர்ந்தும் ஏமாற்றவே சிறிலங்கா அரசாங்கம் விரும்புகிறது. தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல் ''திம்புவில் தொடங்கி கொழும்பு வரை பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டோம். ஆனால், சிங்கள அரசு தமிழர் பிரச்சினையில் உருப்படியான தீர்வு எதையும் முன் வைக்க மறுத்தது'' என்பதே நிசமாகும்.

ஆனால், இதன் பிற்பாடும் அதாவது இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமாகிய பின்னரும்கூட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் சமரசத் தீர்வு காணலாம். சமாதானத்திற்கான கதவுகள் எப்பொழுதும் திறந்தே உள்ளன எனத் தெரிவித்திருந்தனர். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வு பற்றியே பேசியது, இயலாமை காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானம் பற்றிப் பேசுவதாகக் கூறிக் கொண்டது.

இதன் காரணமாக சமரச முயற்சிகளை அரசாங்கம்

தலை நிமிர்த்தி பார்த்தபோது புகைமண்டலமாக இருந்தது

உயிர்தப்பிய அதிபர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

பாடசாலைக்கட்டடத்தை விட்டு ஓடிச் சென்று வெளியிலிருந்த மரங்களின் கீழ் படுத்துக் கொண்டதும் பாரிய சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. தலையை நிமிர்த்திய போது அப்பகுதி முழுவதும் ஒரே கரும்புகை மண்டலமாக இருந்தது என வெள்ளி காலை சுப்பர் சொனிக்விமானக்குண்டு வீச்சின் போது மயிரிழையில் தப்பிய ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அதிபரான திருமதி சிறிகாந்தா தெரிவித்தார்,

மேற்படி குண்டு வீச்சு பற்றி அவர் விபரிக்கையில் சம்பவ தினம் காலை பாடசாலை ஆரம்பமாகிய போது சகல மாணவர்களும் ஆசிரியர்களும் சமுகமளித்திருந்தனர் ஒரு மணி நேரத்திற்குள் சிறிலங்காவின் உலங்கு வானூர்தி ஒன்றுபாடசாலையை மையமாகக் கொண்டு பலதடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது. சந்தேகம் கொண்ட நான் உடனடியாக மாணவர்களை வெளியேற்றி பாடசாலையை மூடினேன். பரீட்சை நடக்க ஏற்பாடாகி இருந்த போதிலும் நான் அதனை பின்போட திட்டமிட்டே பாடசாலையை மூடினேன்.

சகல ஆசிரியர்களும் பத்திற்குட்பட்ட மாணவர்களும் பாடசாலையில் தங்கி நின்று கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்த போதே சுப்பர் சொனிக் விமானத்தின் சத்தம் கேட்டது. உடனடியாக சகலரும் கட்டடத்திலிருந்து வெளியேறி முன்பாக இருந்த மரங்களின் கீழ் நிலத்தில் படுத்துக் கொண்டோம்.

அவ்வேளை பாரிய சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன சிதறல்கள் வந்து எம்மீது விழுவது போல் இருந்தது. தலையை நிமிர்த்தி பார்த்த போது எங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது என்றார்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த ஆசிரியையான திருமதி ராஜரட்ணம் என்பவர் சம்பவம் பற்றிவிபரிக்கையில்; சுப்பர் சொனிக் சத்தம் கேட்டதும் எல்லோரும் மரங்களை நாடி ஓடினர். நானும் கட்டடத்தை விட்டு இறங்கி ஓட முன்னர், குண்டுகள் வீசப்படுவதை உணர்ந்துகட்டடத்தின் அருகிலேயே வீழ்ந்து படுத்தேன். அப்போ கட்டடத்தின் அருகில் வீழ்ந்து வெடித்த குண்டினால் புருவத்தில் காயம் ஏற்பட்டது. கண்களை திறக்க முடியாது இருக்கவே கைகளால் பொத்தியவாறு சம்பியன் லேன் வரை ஓடினேன் என்றார்,

9 அரசியல்வாதிகளை கொல்லத் திட்டம்

சூத்திரதாரி பிடிபட்டாராம்

(கொழும்பு)

அரசாங்க, எதிர்க்கட்சி, மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்பதுபேரை கொல்ல புலிகள் திட்டமிட்டிருந்ததாகவும், இத் திட்டத்தின் சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டார்கள் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

கொழும்பு நகருக்கு மிக அண்மையிலுள்ள வேறொரு நகரத்திலேயே இவர்கள்கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்கள் யார் யாரைக் கொல்ல திட்டமிட்டிருந்தனர் என்பது குறித்து கூற முடியாது எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறின

தமிழ்ப்பகுதி குறித்து அரசு இலக்கற்ற கொள்கை

தேர்தல் ஒத்திவைப்புக் காட்டுகிறது

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் தேர்தலை ஒத்திப்போட்டமை இம் மாகாணம் குறித்து அரசுக்கு ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் பகுதிகள் குறித்து அரசின் கொள்கைகள் அரசியல் இலக்கற்ற குழப்பம் நிறைந்த கொள்கைகள என எதிர்க் கட்சியினர் கூறுவதற்கு அரசின் இம்முடிவு ஆதரவு தருவதாக உள்ளது. இவ்வாறு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைகுறித்துபி.பி.ஸி. கருத்து தெரிவித்தது.

அதில் மேலும் வடக்கில் நூற்றுக் கணக்கான படை

ளின் முன் மோதல் நடைபெற்றது.

தேர்தல் புலிகளை சீண்டிவிடும் என இப்பகுதி அரசியல்வாதிகள் கூறினர் அரச தரப்பிற்கும் எதிர்தரப்பிற்கும் இடையில் நடந்த கூட்டத்தில் தேர்தலை பல மாதங்களுக்கு ஒத்திப்போட முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அரசு தேர்தல் ஒத்திவைப்பிற்கு வேறு காரணங்களை கூறுகிறது. இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

இதேவேளை கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு பூநகரியில் ஏற்பட்ட இராணுவ பின்னடைவே காரணம் என வெரித்

முறைசாராக் கல்வி தொழில் திறன்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் இயங்கும் தொழில் திறன் பயிற்சி எழுத்தூட்டல், வார இறுதி ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 30ஆம்திகதியும் போதனாசிரியர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 30ஆம், 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். கல்வித்திணைக்களத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது.

குறித்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பங்கு பற்றும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

சுகாதாரக் கருத்தரங்கும் தெருக்கூத்தும்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை, நவாலி சுதுமலை பகுதிகளில் வாந்திபேதி நோய் வேகமாகப் பரவிக்கொண்டுவரும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது! குறிப்பாக இம் மழை காலத்தில் அகதிமுகாம்களில் இந்நோய்

வடக்கு நடவடிக்கை அதிகாரியாக ஜெரி சில்வா

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா வட பகுதிக்கான நடவடிக்கை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந் நியமனத்தை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வழங்கியுள்ளார்.

இவர் முன்னர் இராணுவ நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர்கிழக்குப்பிராந்திய தளபதியாகவும் இருந்துள்ளார். இவருடைய பதவிக்காலம் அடுத்த ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு பகுதியில் விமான குண்டுத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டுப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்

நேற்றுமுன்தினம் மேற்படி பகுதிக்கு விரைந்து வந்த குண்டு வீச்சு விமானங்கள் இப்பகுதியில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை.

கடல்நீரேரி அபிவிருத்திக்கு திட்ட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கடல்நீரேரியின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஆய்வரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் ''யாழ் ஏரித் திட்டம் -நோக்கம், விபரம் நன்மைகள்'' என்ற பொருளில் பேராசிரியர் வே. நவரத்தினராசாவும், 'உப்பாற்றுத் திட்டம் என்ற பொருளில் க. இ. குமாரசாமியும், 'யாழ் குடாநாட்டின் நிலநீர் அபிவிருத்தி என்னும் பொருளில் பொறியியலாளர் மு. இரத்தினமும், தொண்டமானாறு நன்னீர் ஏரித்திட்டமும், அதன் பலாபலன்களும்' என்ற பொருளில் சா. அ யோசேப்பும், தொண்டமானாறு உப்பாறு ஆனையிறவுக் கடல்நீரேரியை அண்டிய கரையோரப் பகுதியில் நிலப் பயன்பாடு என்ற பொருளில் பேராசிரியர் செ. பாலச்சந்திரனும், மற்றும் க. இராஜேந்திரமும், எல். டி. இராஜசூரியர் ஆகியோரும் உரைநிகழ்த்தவுள்ளனர். அத்துடன் ''யாழ் கடல்நீரேரியை அண்டியுள்ள நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்'' என்பது பற்றி கலாநிதி ஆ சி. விவேகானந்தனும், ''குடா நாட்டின் ஏரித்திட்டமும், மீன்க

என்ற பொருளில் கலாநிதி கா. சித்திரவடிவேல் மற்றும் கொத்தணி அதிபர் சோ. செல்வநாயகம் ஆகியோரும் 'கடல் வேளாண்மை இலாபமடைய தொண்டமானாறு ஏரியை அபிவிருத்தி செய்தல்' என்பது பற்றி செ. வீரகுலசிங்கமும், ஆனையிறவு கடல்நீரேரியின் கடல்வளம் சார் நன்மைகள் என்பது பற்றி கு. அ. ஸ்ரனிஸ்லோஸும் உரையாற்றவுள்ளனர்.

பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தின் சைவத்துறைப் பரிசளிப்பு விழாஇன்றுகாலை ஒன்பது மணியளவில் மருதனார் மடத்திலுள்ள யாழ் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் முதன்மை விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிஅவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்

மாதாந்த சொற்பொழிவு

சிவகுருநாத குருபீடம் நடத்தும் மாதாந்த சொற்பொழிவு வரிசையில் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் பக்தி இயக்கம் என்ற பொருளில் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. சிவலிங்கராசா உரை நிகழ்த்தவுள்ளார். இச்சொற்பொழிவு இல. 18 குமார

சுத்தியுடன் ஈடுபடவில்லை.

மாறாக, கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல், தமிழ்மக்களையும் தலைவர்களையும் ஏமாற்றி வந்ததுபோல் தொடர்ந்தும் ஏமாற்றவே சிறிலங்கா அரசாங்கம் விரும்புகிறது. தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல் ''திம்புவில் தொடங்கி கொழும்பு வரை பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டோம். ஆனால், சிங்கள அரசு தமிழர் பிரச்சினையில் உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்க மறுத்தது'' என்பதே நிசமாகும்.

ஆனால், இதன் பிற்பாடும் அதாவது இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமாகிய பின்னரும்கூட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் சமரசத் தீர்வு காணலாம். சமாதானத்திற்கான கதவுகள் எப்பொழுதும் திறந்தே உள்ளன எனத் தெரிவித்திருந்தனர். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வு பற்றியே பேசியது, இயலாமை காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானம் பற்றிப் பேசுவதாகக் கூறிக் கொண்டது.

இதன் காரணமாக சமரச முயற்சிகளை அரசாங்கம் எடுக்காதது மட்டுமல்ல, எடுத்தவர்களையும், முயற்சித்தவர்களையும் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து விட்டது. இந்நிலையிலே, அமைச்சர் தொண்டமான் மேற்கொண்ட சமரச முயற்சிகளும், சில வெளிநாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் எடுத்த முயற்சிகளும் தோல்வி கண்டன.

இந்நிலையில், பதவிக்கு வந்த டி. பி. விஜேதுங்காவின்நிலைப்பாடு பிரச்சினைக்கு சமரசத் தீர்வு என்பதற்கே இனிமேல் இடமில்லை என்ற நிலையை உருவாக்கியது. ''இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை 'பயங்கரவாதப் பிரச்சினை' மட்டுமே உள்ளது என்ற அவரது அறிவிப்பானது, சிறிலங்கா அரசாங்கம் சமாதானத் தீர்விற்கான சகல கதவுகளையும் மூடிவிட்டதான பிரகடனமாகவே இருந்தது.

இதற்கு ஏற்றால் போலவே சிறிலங்கா அரசாங்கம் இராணுவ ஆளணிப் பெருக்கத்திலும், இராணுவத் தளபாடப் பெருக்கத்திலும் தீவிரமாக இறங்கியது. அத்தோடு, இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியதோடு, விமானத்தாக்குதல்களையும் அதிகரித்தது. இத்தாக்குதல்களில் பெருமளவு அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பொது இடங்கள், கோவில்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் என்பனவும் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

இந்நிலையானது தமிழரின் பாதுகாப்பும் சுதந்திரமும் என்பதும் சிங்கள பேரினவாதத்திடம் இருந்து சமாதான முறையில் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை மீண்டும் தெளிவாகவே உணர்த்தியது. தமிழரின் பாதுகாப்பும் சுதந்திரமும் தமிழருக்கென அமைக்கப்படும் ஒரு தனியரசு ஒன்றினாலேயே பேணப்படக் கூடியவை என்பதும் வெளிவந்தது.

இவ் அரசியல் யதார்த்தத்தின் வெளிப்பாடே தலைவர் பிரபாகரனின் தமிழ் மக்களுக்கு தனியரசு என்ற பாதையைத் தவிர வேறுவழி இல்லை என்ற அறிவிப்பாகும். ஆனால், அவர் கூறியது போன்றே ''இப்பாதை மிகவும் கடினமானது. கற்களும் முட்களும் நிறைந்தது. விலங்குகளும் விஷ ஜந்துக்களும் நிறைந்தது'' இருப்பினும், இதன் முடிவில் பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான ஒரு இடம் தமிழருக்கு உண்டு என்பதும் உண்மையாகும்.

இதேவேளை, தமிழ் மக்களைப் பொறுத்து எத்துணை இன்னல்கள் வரினும் தமிழீழ விடுதலை நோக்கி வழி நடத்திச் செல்ல உறுதிமிக்க தலைமை தற்பொழுது உள்ளது. இந்நிலையில், அர்ப்பணிப்புக்களுடன் கூடிய பயணத்திற்கு தற்பொழுதே தமிழ் மக்கள் அணிதிரள்வது அவசியமாகின்றது.

இலக்கற்ற கொள்கை

தேர்தல் ஒத்திவைப்புக் காட்டுகிறது

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் தேர்தலை ஒத்திப்போட்டமை இம் மாகாணம் குறித்து அரசுக்கு ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் பகுதிகள் குறித்து அரசின் கொள்கைகள் அரசியல் இலக்கற்ற குழப்பம் நிறைந்த கொள்கைகள என எதிர்க் கட்சியினர் கூறுவதற்கு அரசின் இம்முடிவு ஆதரவு தருவதாக உள்ளது இவ்வாறு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைகுறித்துபி.பி.ஸி. கருத்து தெரிவித்தது.

அதில் மேலும் வடக்கில் நூற்றுக் கணக்கான படையினர் கொல்லப்பட்டதுடன் கிழக்கில் இவ்வளவு விரைவில் தேர்தல் நடாத்த எடுக்கப்பட்ட முடிவு முட்டாள் தனமானது என எதிர்க் கட்சிகள் வர்ணித்தன. கிழக்கில் தேர்தல் நடந்தால் படைகள் தேர்தலை மேற்பார்வை செய்வது கடினமாக இருக்கும் என்பதை புலிகள் நடத்திய தாக்குதல் எடுத்துக்காட்டியது. கிழக்கில் மோசமான பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. வாழ்க்கை பழைய நிலைக்கு வருவதாக அரசு கூறும் பகுதியில் சில தினங்களின் முன் மோதல் நடைபெற்றது.

தேர்தல் புலிகளை சீண்டிவிடும் என இப்பகுதி அரசியல்வாதிகள் கூறினர் அரச தரப்பிற்கும் - எதிர்தரப்பிற்கும் இடையில் நடந்த கூட்டத்தில் தேர்தலை பல மாதங்களுக்கு ஒத்திப்போட முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அரசு தேர்தல் ஒத்திவைப்பிற்கு வேறு காரணங்களை கூறுகிறது. இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

இதேவேளை கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு பூநகரியில் ஏற்பட்ட இராணுவ பின்னடைவே காரணம் என வெரித்தாஸ் வானொலி அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகள் நடத்திவரும் போரை ஒடுக்கி வடகிழக்கு மாகாணங்களில் அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டிருந்தது ஆனால் இப்போது பூநகரி தந்த இராணுவ பின்னடைவு தேர்தலை ஒத்திப்போட வைத்ததாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் கைதாவோரை துன்புறுத்த வேண்டாம்

வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுவோரை துன்புறுத்துவதை பொலிசார் கைவிட வேண்டும் என ஐக்கிய சோசலிச முன்னணியை சேர்ந்த திரு வாசுதேவ நாணயக்கார கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த வாசுதேவ தெற்கில் தற்போது தமிழ் இளைஞர்கள் கைதாவது அதிகரித்து வருகின்றது. இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதாகும் இளைஞர்களை பொலிசார் மிக மோசமான முறையில் துன்புறுத்துவதாக அறிகிறேன். இவ்வாறு துன்புறுத்துவதை பொலிசார் கைவிட வேண்டும் என்றார்.

மதுபோதையில் கடமை புரிந்த வைத்தியர் கட்டாய ஓய்வில்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையுடன் கடமையில் ஈடுபட்ட வைத்தியர் ஒருவரைக் கட்டாய ஓய்வில் செல்லுமாறு சுகாதார அலுவலகம் கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த பலமாத காலமாக இவர் மதுபோதையுடன் தள்ளாடித் தடுமாறிய நிலையில் கொக்குவில் பகுதி பொது மருத்துவ மனையில் வைத்தியராகக் கடமை புரிந்தார் என்றும், இவர் தொடர்பாக பல முறைப்பாடுகள் செய்யப்பட்டதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (நி)

மரநடுகை

மாவீரர்களை நினைவு கூரும் பொருட்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியோரமாக கடந்த 21-ம், 22-ம் திகதிகளில் யாழ் றோட்டரக்ட் கழகத்தினரால் மரநடுகை செய்யப்பட்டது.

பயிற்சி வகுப்பு எதிர்வரும் 30ஆம்திகதியும் போதனாசிரியர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 30ஆம், 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். கல்வித்திணைக்களத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது.

குறித்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பங்குபற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

சுகாதாரக் கருத்தரங்கும் தெருக்கூத்தும்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை, நவாலி சுதுமலை பகுதிகளில் வாந்திபேதி நோய் வேகமாகப் பரவிக்கொண்டுவரும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது! குறிப்பாக இம் மழை காலத்தில் அகதிமுகாம்களில் இந்நோய் சிறுவர்கள் மத்தியில் வேகமாக பரவி வருகின்றது. இதனால் சுகாதார பகுதியினர் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி வருவதோடு இப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களில் தினமும் மாலை7 மணி முதல்இரவு10 மணிவரை கருத்தரங்குகளையும் தெருக்கூத்துகளையும் நடத்தி வருகின்றனர் (70)

நாட்டின் நிலநீர் அபிவிருத்தி என்னும் பொருளில் பொறியியலாளர் மு. இரத்தினமும், தொண்டமானாறு நன்னீர் ஏரித்திட்டமும், அதன் பலாபலன்களும்' என்ற பொருளில் சா. அ யோசேப்பும், தொண்டமானாறு உப்பாறு ஆனையிறவுக் கடல்நீரேரியை அண்டிய கரையோரப் பகுதியில் நிலப் பயன்பாடு என்ற பொருளில் பேராசிரியர் செ. பாலச்சந்திரனும், மற்றும் க. இராஜேந்திரமும், எல். டி. இராஜசூரியர் ஆகியோரும் உரைநிகழ்த்தவுள்ளனர். அத்துடன் ''யாழ் கடல்நீரேரியை அண்டியுள்ள நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்'' என்பது பற்றி கலாநிதி ஆ சி. விவேகானந்தனும், ''குடா நாட்டின் ஏரித்திட்டமும், மீன்களும், மீன் சார்ந்த உயிரினங்களின் வேளாண்மையும்''

சைமசமயப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடாத்தும் சைவ சமயப் பரீட்சை இன்று காலை 8 30மணி தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

னார் மடத்திலுள்ள யாழ் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் முதன்மை விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டிஅவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்

மாதாந்த சொற்பொழிவு

சிவகுருநாத குருபீடம் நடத்தும் மாதாந்த சொற்பொழிவு வரிசையில் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் பக்தி இயக்கம் என்ற பொருளில் யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. சிவலிங்கராசா உரை நிகழ்த்தவுள்ளார். இச்சொற்பொழிவு இல. 18 குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்போடப்பட்டது

மனைப் பொருளியல் மூலவள நிலையத்தினால் நடாத்தப்படவிருந்த குறுவினா, தையல் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன. போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி இந்தியா கவலை தெரிவிப்பு

(வாசிங்டன்)

பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்துவதற்கு வகைசெய்த பிரஸ்லர் திருத்தத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்வது என்று கிளிண்டன் நிர்வாகம் எடுத்த தீர்மானத்தை இந்தியா வன்மையாகக் குறை கூறியுள்ளது.

வாசிங்டனில் இருக்கும் இந்தியத் தூதுவர் சித்தார்த்த சங்கர் ரே அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் வாறன் கிறிஸ்தோபரை நேரில் சந்தித்து பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவி கிடைக்கக் கூடிய சாத்தியப்பாடு அதிகரித்து இருப்பது தொடர்பாக இந்தியா கவலையடைவதாக எடுத்துக் கூறியுள்ளார். எனினும் பாகிஸ்தானுக்கு பொருளாதார உதவிகள் மீண்டும் வழங்கப்படுவதில் இந்தியாவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் ரே சுட்டிக் காட்டியுள்ளார்.

வாக்குகள் எண்ணும் பணி நேற்று ஆரம்பித்தது

(டில்லி)

உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் டில்லி சட்டப் பேரவைக்கான தேர்தல்களின் வாக்குகளை எண்ணும் பணி நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகியது 425 உறுப்பினர்களைக் கொண்ட உத்தரப் பிரதேச சட்டப்பேரவைக்கு 422இடங்களுக்கான வாக்குப்பதிவு இம்மாதம் 18 மற்றும் 21-ம் திகதிகளிலும் டில்லி சட்டப் பேரவைக்கான வாக்குப் பதிவு கடந்த 6-ம் திகதியும், இமாசலப் பிரதேசத்தில் 68 சட்டப்பேரவை உறுப்பினர் தெரிவுக்கான வாக்குப்பதிவு கடந்த 7-ம் திகதியும், ராஜஸ்தானில் 200 இடங்களில் 199 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இம்மாதம் 11-ம் திகதியும் நடைபெற்றது தெரிந்ததே.

தூரதர்ஷன் மீது தாக்குதல்

(டில்லி)

காஷ்மீர் மாநிலத் தலைநகர் சிறீநகரில் இருக்கும் தூரதர்ஷன்தொலைக்காட்சி நிலையத்தின் மீது முஸ்லிம் தீவிரவாதிகள் அண்மையில் ராக்கட் தாக்குதல் ஒன்றை நடத்தினர் இதனால் பொறியியலாளர் எஸ். பி. சிங் கொல்லப்பட்டதோடு நிலையமும் பலத்த சேதமடைந்துள்ளது இச் சம்பவத்தைத் தொடர்ந்துதொலைக்காட்சி அஞ்சல் நிலையம், மற்றும் வானொலி அஞ்சல் நிலையம் என்பனவற்றிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

தீவிரவாதிகளுக்கு எதிரான செய்திகளை இந் நிலையங்கள் ஒளிபரப்புவதாக குற்றஞ்சாட்டப்பட்டு வருவது தெரிந்ததே.

மன்னார் மாவட்டத்தில் மாவீரர்தின நிகழ்ச்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலும் மாவீரர்தினம் எழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் அனைத்துமாவீரர்களையும் நினைவு கூரும்முகமாக மடுப் பிரதேசத்தில் மாவீரர் தினம் மிகச் சிறப்பாக நினைவு கூரப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர்கள் பான்ட் வாத்திய இசையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். இரு நிமிட மௌன அஞ்சலியை தொடர்ந்து மன்னார் மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் நந்தகுமார் வரவேற்புரையை நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மாவீரர்களின் பெற்றோர்கள் பான்ட் வாத்திய இசையுடன் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டனர். சரியாக 12 மணி ஒரு செக்கனிற்கு ஆலய மணிகள் ஒலித்தன. 12 மணி இரண்டு நிமிடத்திற்கு பிரதான ஈகைச் சுடரை மாவட்டத் தளபதி ஆ கதிர் ஏற்றிவைக்க தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு பெற்றோர்கள் ஈகைச் சுடர்களை ஏற்றினர். ஒலிபெருக்கியிலும் மாவீரர் துயிலுமில்லப் பாடல் ஒலிக்கப்பட்டது.

மாவீரர்களின் திருவுருவப் படங்களின் முன் தீபங்கள் ஏற்றிய பெற்றோர் பான்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

அனுமதி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 1994-ம் ஆண்டில் ஆண்டு 6 வகுப்பில்மாணவர்களைஅனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கல்லூரி நிர்வாகம் கோரியுள்ளது.

01.02.83 க்கும் 31.01 84 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்த தற்போது ஆண்டு 5 கல்வி கற்கும் மாணவர்கள் இக்கல்லூரியில் 6-ம் ஆண்டு அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்ப் படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து 7 12.93 க்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி

விரிவுரைகள்

கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

5-12-93 இல் ஆரம்பமாகின்றன

கலைமாணி B A.

விஞ்ஞானமாணி B Sc (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2-12-1993

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148|1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

எறிகணை வீச்சு

நேற்று முன்தினமிரவு காரைநகர் வலந்தலைப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் எறிகணை வீச்சு மற்றும் கனரகஆயுதங்களால் வேட்டுகளையும் தீர்த்தனர். பொன்னாலை பகுதி நோக்கி நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

திருமலை மீனவர் கரையொதுங்கினார்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையைச் சேர்ந்த மீனவர் ஒருவருடன் படகு ஒன்று நேற்று நாகர் கோவில் கடற்கரையில் கரை ஒதுங்கியது. இப்படகுடன் கரையொதுங்கிய மீனவர் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுதேசிச திருநாள் 1994 பவள விழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட பவள விழா- 1994 வரும் 14-04-94 இல் நடைபெறவுள்ளது.மேற்படிவிழாவையிட்டு மாவட்ட ரீதியாக நாடகம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன

தோற்பந்து எறிபந்தாட்டம் 6பேர் கொண்ட 6ஓவர், மென்பந்து எறிபந்தாட்டம் 7பேர் கொண்ட 12 ஓவர் போட்டி மற்றும் பக்கம் 9பேர் கொண்ட உதைபந்தாட்டம், 40வயதுக்கு மேல் பக்கம் 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் கரபந்தாட்டம் செற்அப் முறை, ஓவர் முறை இரண்டும், வலைப்பந்தாட்டம், தாச்சி, போர்த்தேங்காய் அடித்தல், மாட்டு வண்டிச் சவாரி மற்றும் ஆண் - பெண் இருபாலாருக்குமான சைக்கிள ஓட்டம்,மரதன் ஓட்டம், அஞ்சல் ஓட்டப் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி வரும் டிசெம்பர் 10ஆம் திகதியாகும். மேலும் சரித்திர நாடகப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி வரும் ஜனவரி 15, 1994.

மேலதிக விபரங்களுக்கு நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கௌரவ செயலாளர் ச. த. கணநாதன் கேட்டுள்ளார்.

கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் இன்று பேரவை மண்டபத்தில் நடைபெறும். பேரவை உறுப்பினர்களும் புதிய கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளுமாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சி ஊழியர்கள் மாகாண பொது சேவையில் சேர்ப்பு

(பருத்தித்துறை)

தற்போது உள்ளூராட்சி ஊழியர்களாகப் பணியாற்றும் சகல ஊழியர்களும் மாகாண பொதுச்சேவையினுள் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளார்கள் என வட.கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், மாநகர ஆணையாளர்கள், நகரசபைச் செயலாளர்கள், பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி ஊழியர்கள் மாகாண பொதுச் சேவையினுள் சேர்த்துக்கொள்ளப் பட்டுளளபடியால் இவர்களின் ஒய்வூதியம் சம்பந்தமான விபரங்களும் மாகாண மட்டத்திலே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி ஊழியர்களின் விபரங்களையும் தயாரித்து அனுப்பிவைக்குமாறும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் வடக்கு கிழக்கில் உள்ள சகல மாநகர ஆணையாளர்கள், நகரசபைச் செயலாளர்கள், பிரதேச சபை விசேட ஆணையாளர்களையும் அவசரமாகக் கேட்டுள்ளது. இவ்விபரங்கள் யாவும் உளநாட்டு மாகாண அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (25)

தொண்டமானின் நிலைப்பாடு; பலவீனமடைந்த நிலையில் அரசு

(கொழும்பு)

''வடக்கு - கிழக்கு யுத்தத்தில் தற்போது உள்ள நிலைமை காரணமாகவும், அரசாங்க கட்சிக்குள் உள்ள உட்பூசல் காரணமாகவும், அரசாங்கம் பெரும் பலவீன நிலையை அடைந்துள்ளது. அத்துடன் அது ஒரு பாரிய பிளவையும் எதிர் கொண்டுள்ளது.''

இவ்வாறு 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் செல்வாக்கு மிக்கவரான திரு. எஸ். தொண்டமான் என்ன முடிவை எடுக்கப்போகிறார் என்பதை அரசியல் அவதானிகள் எதிர்பார்த்து உள்ளனர். இன்று நடைபெறும் இதொ.க. செயற்குழு கூட்டம் இ.தொ.க. அரசாங்கத்துடன் தொடர்ந்து இருப்பதா விலகுவதா என முடிவு செய்ய உள்ளது.

தொண்டமான், அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொண்டால் மத்திய மாகாணத்தின் ஆட்சி எதிர்க் கட்சிகளின் கைக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. இந்நிலையில்எதிர்க் கட்சியினர் காமினி திசநாயக்காவை முதலமைச்சராக்கக் கூடும்.

இவ்வாறு காமினி முதலமைச்சராவதை சுதந்திரக் கட்சி விரும்புகிறது.

தொண்டமான் சிறிமாவுடனும், காமினி திசநாயக்கவுடனும்பலசுற்றுபேச்சுகளை நடாத்தியுள்ளார், இதனால் அரசாங்கம் பதற்றம் அடைந்துள்ளது. எனவே தோட்டங்களை 30வருடத்திற்கு தனியாருக்கு குத்தகைக்கு வழங்கும் திட்டத்தை கைவிட அரசு முடிவு செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழத்திற்கான

தொடரும்

இவ்வாறு வடமராட்சிக் கோட்டத்திற்கான மாவீரர் நாள் நேற்றுமாலை அல்வாய் டயமன்ஸ் விளையாட்டு மைதானத்தில், வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கடற்புலிகளின் விசேடதளபதி திரு. சூசை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, கடற்புலிகளின் மகளிர் அணி நடந்து முடிந்த நாகதேவன் கடற்படைத் தாக்குதலின் போது எம்மை விட மேலான நிலையில் படகேறி அரைமணிநேரத்திற்குள் கடற்படைதுறையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் மற்றும் பல படகுகளையும் மீட்ட பெருமைஇவர்களைச் சேரும் இந்த படைப்பிரிவில் செல்வி சோதி அவர்களின் சாதுரியத்தினால் அந்த வெற்றி கிடைத்தது.இவர் இத்தாககுதலின் போது வீரச்சாவையடைந்த போதிலும் முதல் நாள் இத்துறையை தகர்க்க வேண்டுமென்று முனைப்போடு செயல்பட்டவர். கடற்படைக் கப்பல்களை பெற்றுத் தந்தவர்கள் இந்த மாவீரர்கள் இவர்களால் இன்று எமது போராட்டம் மேலோங்கி நிற்கிறது.

இந்த மாவீரர்களின் எண்ணங்கள், கனவுகளை நிறைவேற்ற வேண்டும் அவர்களது இலட்சியம் தமிழீழம் இந்த இலட்சியத்தை அடைய அனைவரும் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பூநகரி - நாகதேவன்துறை தாக்குதல் மூன்று தினங்கள்

அடுத்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தல்

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டின் இறுதியில் நடைபெறும் என ஜனாதிபதி டி பி விஜேதுங்க அறிவித்துள்ளார் தென்னிலங்கையில் பாடசாலைவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி விஜேதுங்க இத்தகவலை வெளியிட்டார்.

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 1995ஆம் ஆண்டு மார்ச்மாதத்தில்நடைபெறும் எனவும் ஜனாதிபதி விஜேதுங்க அங்கு உறுதியளித்தார்.

பதவி உயர்வில் அரசியல் படையினரிடையே அதிருப்தி

(கொழும்பு)

பாதுகாப்பு படையினருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படும் போது அதில் அரசியல் தலையீடுகள் நடைபெறுவதாகவும் அது தற்போது மேலும் விரிவடைந்து வருவதாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் முக்கியமாக இராணுவத்தினரின் அனுபவங்களையும், திறமைகளையும் கருத்தில் கொள்ளாது அரசியல்வாதிகளின் கையாட்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டமையினாலே அண்மை காலத்தில் இராணுவத்தினர் பல பின்னடைவுகளை சந்தித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் காங்; பா.ஜ. பின்னடைவு

வெகுஜன சமாஜகட்சி முன்னணியில்

இந்தியாவில் அண்மையில் நடந்த நான்கு சட்டசபைகளுக்கான இடைத்தேர்தல்களில் மூன்று சட்டசபைகளுக்குமான தேர்தல் முடிவுகள வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஹிமாசல் பிரதேசில் 22 தொகுதிகளில் வாக்குகள் எண்ணும்வேலை முடிவடைந்துள்ளது 15 தொகுதிகளில் இந்திரா காங்கிரசும், மூன்று தொகுதிகளில் பாரதீய ஜனதாக் கட்சியும், தலா இரண்டு தொகுதிகளில் முன்னணியில் உள்ளன.

ராஜஸ்தானில் பாரதீய ஜனதாக் கட்சி 37 இடங்களிலும் காங்கிரஸ் 31 இடங்களி

முன்னணியில் உள்ளன. இதுவரை எண்ணப்பட்ட 23தொகுதிகளில் முறையே இரு கட்சிகளும் தலா 9 தொகுதிகளில் முன்னணியில் உள்ளன இந்திரா சாங்கிரஸும். பாரதீய

கலைமாணி B A.

விஞ்ஞானமாணி B Sc (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2-12-1993

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி
148|1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)

5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா பாலகுரு

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)

அன்னையின் மடியில்	அநியாய அழிப்பில்
02- 01- 1940	22- 11- 1988

திதி- 28- 11- 93

ஆண்டுகள் ஐந்தாயினும் ஆறாது உங்கள் துயர், தேசத் துரோகிகள் செய்த செயலால் தேசம் விட்டுப் போனாலும் எம் நெஞ்சமதில் வீற்றிருக்கும் எங்கள் ஐயா,

அன்பு
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்

பருத்தித்துறை வீதி,
காவற் பணிமனைமுன்,
கோப்பாய்.

(சி- 8016)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

மாகாண பொது சேவையில் சேர்ப்பு

(பருத்தித்துறை)

தற்போது உள்ளூராட்சி ஊழியர்களாகப் பணியாற்றும் சகல ஊழியர்களும் மாகாண பொதுச்சேவையினுள் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளார்கள் என வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், மாநகர ஆணையாளர்கள், நகரசபைச் செயலாளர்கள், பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி ஊழியர்கள் மாகாண பொதுச் சேவையினுள் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளபடியால் இவர்களின் ஒய்வூதியம் சம்பந்தமான விபரங்களும் மாகாண மட்டத்திலே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி ஊழியர்களின் விபரங்களையும் தயாரித்து அனுப்பிவைக்குமாறும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் வடக்கு கிழக்கில் உள்ள சகல மாநகர ஆணையாளர்கள், நகர சபைச் செயலாளர்கள், பிரதேச சபை விசேட ஆணையாளர்களையும் அவசரமாகக் கேட்டுள்ளது. இவ்விபரங்கள் யாவும் உளநாட்டு மாகாண அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (25)

யாழ். குடாநாட்டில்

தார். வலிகாமம் கோட்ட பொறுப்பாளர் இளங்குமரன் ஈகச் சுடரை ஏற்றிவைத்தார்.

முன்னதாக மாணவர் அமைப்பினரின் பான்ட் வாத்திய இசையுடன் தமிழீழ காவல்துறையினரின் அணிவகுப்பு யாழ். பழைய பூங்காவிலிருந்து ஆரம்பித்து கூட்ட மைதானத்தை வந்தடைந்தது அணிவகுப்பு மரியாதையினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ், மாவட்ட விசேட தளபதி செல்வராசா ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர் மண்மீட்புப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒருநிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலிகாமம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. இக்கூட்டத்தில மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், திரு. சண்முகநாத பிள்ளை, யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் இளையவன், மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தமிழீழமாவீரர்தின நிகழ்ச்சிகள் தென்மராட்சியில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மாலை 4 00 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு முன்பாக தேவற்கேணி கந்தசாமி கோவிலடியில் இருந்து மகளிர் படையணி, விடுதலைப் புலிகள் மாணவர்அமைப்பு ஆகியோரது பாண்ட் வாத்திய அணிவகுப்பு மைதானத்தை வந்தடைந்தது.

மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் ஈகைச்சுடரை கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் சேரலாதன் ஏற்றிவைத்தார் மாவீரர் நினைவுச் சின்னத்திற்கு அரசியற் பயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் அரசண்ணா மாலை அணிவித்தார். தென்மராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் சந்தண்ணா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பச்சிலைப்பள்ளி வர்த்தக சங்கத் தலைவர் பூபாலசிங்கம், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் சேரலாதன், தமிழீழநீதிநிர்வாகப்பொறுப்பாளர் பரா, யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி, அரசியற் பயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் அரசண்ணாஆகியோர் உரையாற்றினர்

தமிழீழ மாவீரர் தின நிகழ்வுகளில் வடமராட்சி கோட்டத்தில் நேற்றுமாலை 3-30 மணியளவில் நெல்லியடி சந்தியில் இருந்து வடமராட்சி மகளிர் மாணவரமைப்பின் பான்ட் வாத்திய அணியும் தொடர்ந்து கடற்புலிகளின் படைத்துறை பள்ளியினரின் அணிவகுப்பும்இடம்பெற்றது.

அல்வாய் டயமன்ற் மைதானத்தை இவ்வணிவகுப்பு பிற்பகல் 4-30 மணியளவில் வந்தடைந்தது. தொடர்ந்து வடமராட்சி விசேட பொறுப்பாளர் செல்வம் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். விடுதலைப் புலிகள் உறுப்பினர் தேவர் மாவீரர் நினைவு மண்டபத்திற்கு ஈகைச்சுடரை ஏற்றினார்.

பெருமைஇவர்களைச் சேரும் இந்த படைப்பிரிவில் செல்வி சோதி அவர்களின் சாதுரியத்தினால் அந்த வெற்றி கிடைத்தது.இவர் இத்தாககுதலின் போது வீரச்சாவையடைந்த போதிலும் முதல் நாள் இத்துறையை தகர்க்க வேண்டுமென்று முனைப்போடு செயல்பட்டவர். கடற்படைக் கப்பல்களை பெற்றுத் தந்தவர்கள் இந்த மாவீரர்கள் இவர்களால் இன்று எமது போராட்டம் மேலோங்கி நிற்கிறது.

இந்த மாவீரர்களின் எண்ணங்கள், கனவுகளை நிறைவேற்ற வேண்டும் அவர்களது இலட்சியம் தமிழீழம் இந்த இலட்சியத்தை அடைய அனைவரும் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பூநகரி - நாகதேவன்துறை தாக்குதல் மூன்று தினங்கள் நடைபெற்றன அதன்போது 451 போராளிகள் வீரச்சாவடைந்தனர். மாவீரர்களின் இழப்பு எமது போராட்டத்தில் ஒரு திருப்பு முனையை தந்திருக்கிறது. மூன்று தினங்கள் நடந்த இத் தாக்குதலில் மேலும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விழுப்புண்ணடைந்துள்ளனர். மாவீரர்கள் விடுதலைப் போராட்ட புகழை உலகெங்கும் பரப்பியவர்கள் என்றார். (யோ)

பாதுகாப்பு

னர் எதிர்ககட்சிகள் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லைஎன அரசாங்கத்தைக் குறைகூறிவருவது குறிப்பிடத்தக்கது

மீனவரை

சுழிபுரம், திருவடிநிலை கரைக் கடற்பரப்பில் சிறுதொழில்களில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் போது சுழிபுரம் சவுக்கடித் துறையை அண்மித்த கரையோரப் பகுதிகளில் பீரங்கிகள் வெடித்தன. மீனவர்கள் உயிர்ச்சேதம் எதுவுமின்றி தப்பித்துக்கொண்டனர் (41)

தொடர்ந்து மாவீரர் தின பொதுக்கூட்டம் வடமராட்சி துணை அரசியல்துறை பொறுப்பாளர் பைந்தமிழன் தலைமையில் நடைபெற்றது. செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜனனி விடுதலைப் புலிகளை சேர்ந்த தேவர், முதல் மாவீரன் லெப். சங்கரின் தந்தை சி. செல்வசந்திரன், கடற்புலிகளின் விசேட தளபதி சூசை, பெண்கள் புனர்வாழ்வு நிறுவன பொறுப்பாளர் செல்வி சுடரவள், தமிழீழ கல்விக்கழக துணை பொறுப்பாளர் வே. பாலகுமாரன் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

அவர் மேலும் தெரிவிக்கை

தார்.

உத்தரப் பிரதேசத்தில் காங்; பா.ஜ. பின்னடைவு

வெகுஜன சமாஜகட்சி முன்னணியில்

இந்தியாவில் அண்மையில் நடந்த நான்கு சட்டசபைகளுக்கான இடைத்தேர்தல்களில் மூன்று சட்டசபைகளுக்குமான தேர்தல் முடிவுகள வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஹிமாசல் பிரதேசில் 22 தொகுதிகளில் வாக்குகள் எண்ணும்வேலை முடிவடைந்துள்ளது 15 தொகுதிகளில் இந்திரா காங்கிரசும், மூன்று தொகுதிகளில் பாரதீய ஜனதாக் கட்சியும் முன்னணியில் உள்ளன. வேறு பத்துத் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் எட்டுத் தொகுதிகளில் முன்னணியில் உள்ளது பாரதீய ஜனதாக் கட்சி ஒரு தொகுதியில் மாத்திரம் முன்னணியில் உள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் வெகுஜனசமாஜக் கட்சியும், பகுஜன்சமாஜக்கட்சியும் முன்னணியில் உள்ளன. இதுவரை எண்ணப்பட்ட 23தொகுதிகளில் முறையே இரு கட்சிகளும் தலா 9 தொகுதிகளில் முன்னணியில் உள்ளன இந்திரா காங்கிரஸும், பாரதீய ஜனதாக் கட்சியும், தலா இரண்டு தொகுதிகளில் முன்னணியில் உள்ளன.

ராஜஸ்தானில் பாரதீய ஜனதாக் கட்சி 37 இடங்களிலும் காங்கிரஸ் 31 இடங்களிலும் ஜனதாதள் 2 இடங்களிலும் சுயேட்சை 6 இடங்களிலும் முன்னணியிலுள்ளன.

டெல்லியில் 16 அசம்பிளித் தொகுதிகளுக்கான வாக்குகள் எண்ணும் வேலை முடிவடைந்துளளது. பாரதீய ஜனதாக் கட்சி 10 தொகுதிகளிலும், இந்திரா காங்கிரஸ் நான்கு தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளன.

படைபலத்தை

கைப்பற்றப்படுவதும் எம்மை இராணுவ பலத்தினால் அடக்கிவிடமுடியாது என்பதனை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளது''

இவ்வாறு அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் நேற்று அரியாலையில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் உரையாற்றுபோது தெரிவித்தார்.

மேலும் உரையாற்றுகையில்; இன்று எமது விடுதலைப்போராட்டத்தின்வளர்ச்சியைப் பார்த்திருப்பீர்கள். ஆனையிறவு முகாம் சமரின் போது கடல் வழியாக இராணுவத்தினரைக் கொண்டு வந்து குவித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு வருட காலத்திற்குள் கடல்வழியே இராணுவம் நுழைய முடியாத நிலையைத் தலைவர் பிரபாகரன் ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் எங்கள் வளர்ச்சியை நீங்கள் உணர்ந்துகொள்ள முடியும்.

ஒரு கடற்படைத் தளமே அழிக்கப்பட்டிருக்கிறது அத்தளத்திலிருந்த நவீனரக ஆயுதங்கள், படகுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இது கடற்புலிகளின் பாரிய வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

இன்று பெருமளவில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பல நவீன ரக ஆயுதங்கள் எங்கள் கைகளில் உள்ளன. இந்த ஆயுதங்கள் பிரயோகப்படுத்தப்பட வேண்டுமானால் படைபலம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேணடும். நாங்கள் எங்களைப் பலப்படுத்திக் கொள்ளாவிட்டால் நாங்கள் அழிவுகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இன்று தென்தமிழீழத்திலே இராணுவ பலம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் பாரிய அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் அங்கே எமது மண் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் பூமியிலே தமிழீழத்திற்கான அடித்தளத்தை அமைக்க வேண்டுமானால் இங்குள்ள இராணுவ முகாம்கள் தகர்த்தெறியப்படவேண்டுமானால் எமது படைபலம் அதிகரிக்கப்படவேண்டும்.

இன்று இந்த மாவீரர் நாளில் அவர்களின் கனவை நனவாக்க வேண்டுமானால் நாம் அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் தமிழீழ தேசியத் தலைவருடைய வழிநடத்தலிலே அவருடைய காலத்திலே நாங்கள் விடுதலை பெற வேண்டும். அவருடைய படையணியிலே நாங்கள் ஒவ்வொருவரும் இணைந்துகொள்வதன் மூலம் தான் எமது நாட்டை நாங்கள் மீட்கலாம் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்றார்.